**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.4–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதிகள் ஆஜர் இல்லை . 1ம்பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.536/2022

பி.வா.சா.4 சரவணன் த /பெ அய்யாசாமி

<u>வாதி தரப்பில்குறுக்குவிசாரணை :–</u>

1. கடந்த 15 ஆண்டுகளாக சரவணா ஸ்டுடியோ கரூர் மாவட்டம் அறவாக்குறிச்சியில் நடத்தி வருகிறேன். நான் தான் மேற்கண்ட ஸ்டுடியோவிற்கு முழு உரிமையாளர் ஆவேன். 2 பணியார்கள் என்னிடம் வேலை பார்க்கிறார்கள். திருமணம நிகழ்வுகளில் நான் தான் வீடியோ எடுப்பேன். நான் 10 வகுப்பு படித்துள்ளேன். திருமண நிகழ்வுகளில் எடுக்கும்வீடியோக்களில் Back Ground music போட்டு எடிட் செய்து நான் தான் தருவேன்.

2. மேற்படி திருமண நிகழ்வுகளில் தேவையில்லாதவையை நீக்கி வீடியோ எடிட் செய்து எடுக்கப்படுமா என்றால் இல்லை. ஜனனிக்கு 2016ம் ஆண்டு திருமண நிகழ்வு வீடியோவை கொடுத்து 10 வருடங்கள் ஆகின. லோகஸ்வரன் என்பவரின் திருமண நிகழ்வின் வீடியோ கொடுத்தது 2018 வருடம் ஆகும். அந்த 10 வருடங்களில் திருமண நிகழ்வு வீடியோவை அப்படியே வைத்து இருந்தார்கள் என்று சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும். அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லையா என்றால் இல்லை.

3. நான் கொடுத்த சர்டிபிகட்டில் உள்ள Hash value எப்படி பெறப்பட்டது என்றால  MD5.com என்ற Web siteல் வீடியோ அப்லோட் செய்தால் அதற்கான Hash value வரும். நான் எடுத்த raw footageயை சமர்பிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்காக பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்  சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை